# வணிகமும் கணக்கீட்டுக்கல்வியும்

**10**

## அலகு ரீதியான மீட்டல் செயலட்டைகள்

## தரம் 10

## கொள்வனவு நாளேடு, விற்பனை நாளேடு மற்றும் பொது நாட்குறிப்பேடு

1. வியாபாரத்தில் கொள்வனவு நாளேட்டில் பதிவு செய்யப்படும் கொடுக்கல் வாங்கல்களாக அமைவது ?
   (1) காசுக்குக் கொள்வனவு
   (2) வணிகத்தின் பயன்பாட்டுக்காக கடனுக்குக் கொள்வனவு
   (3) மீள் விற்பனை நோக்கில் மேற்கொள்ளப்பட்ட அனைத்துக் கொள்வனவுகளும்.
   (4) மீள் விற்பனை நோக்கில் மேற்கொள்ளப்பட்ட பொருட்களின் கடன் கொள்வனவுகள்.

2. கொள்வனவு நாளேட்டில் பதிவுகளை மேற்கொள்வதற்குப் பயன்படுத்தப்படும் மூல ஆவணமானது,

| | |
|---|---|
| (1) வரவு தாள் | (2) செலவு தாள் |
| (3) கொள்வனவுப் பட்டியல் | (4) விற்பனைப் பட்டியல் |

3. ஹிறிபிடிய ஸ்டோர்ஸினால் கடனுக்குக் கொள்வனவு செய்த பொருட்கள் தொடர்பான பின்வரும் விபரங்கள் உங்களுக்குத் தரப்படுகின்றன.

| திகதி | இலக்கம் | வழங்குனர் | முழுப் பெறுமதி |
|---|---|---|---|
| 2021/3/01 | 071 | அசல | 65 000 |
| 2021/3/10 | 078 | நிகிணி | 13 000 |
| 2021/3/20 | 037 | பினர | 21 000 |
| 2021/3/30 | 070 | ரம்யா | 11 000 |

வேண்டப்படுபவை,
   (1) மேலே உள்ள கொடுக்கல் வாங்கல்களுக்கான நாட்குறிப்பு பதிவுகள்.
   (2) உரிய பேரேட்டுக் கணக்குகளில் பதிக.

4. கொள்வனவு நாளேட்டின் மொத்தத் தொகையினை பேரேட்டுக்கு மாற்றும் நாட்குறிப்பு எது?
   (1) கடன் கொடுத்தோர் வரவு கொள்வனவு கணக்கு செலவு
   (2) விற்பனைக் கணக்கு வரவு உரிய கடன் கொடுத்தோர் கணக்கு செலவு
   (3) கொள்வனவு கணக்கு வரவு கடன் கொடுத்தோர் கணக்கு செலவு
   (4) கொள்வனவு கணக்கு வரவு உரிய கடன் கொடுத்தோர் கணக்கு செலவு

5. வியாபாரத்தின் விற்பனை நாளேட்டில் பதிவு செய்யப்படும் கொடுக்கல் வாங்கல்களாக அமைவன?
   (1) காசுக்கு விற்பனை மற்றும் கடனுக்கு விற்பனை
   (2) அனைத்துக் கடன் விற்பனைகளும்.
   (3) மீள் விற்பனை பொருட்களின் கடனுக்கு விற்பனை.
   (4) காசுக்கு விற்பனை மட்டும்.

Commerce and Business Studies Branch

6. விற்பனை நாளேட்டில் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்யும் போது நீங்கள் பயன்படுத்தும் மூல ஆவணங்கள் ஆவன ?
   (1) செலவுத் தாள்
   (2) வரவுத் தாள்
   (3) கொள்வனவு பட்டியல்
   (4) விற்பனை பட்டியல்.

7. வல்லவ ஸ்ரோர்ஸினால் மேற்கொள்ளப்பட்ட கடன் விற்பனைக் கொடுக்கல் வாங்கல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| திகதி | இலக்கம் | கொள்வனவாளர் | பெறுமதி |
|---|---|---|---|
| 2021.07.01 | 98 | அமல் வணிகம் | 27 000 |
| 2021.07.10 | 99 | வாசனா வியாபாரிகள் | 64 000 |
| 2021.07.16 | 100 | நாமல் ஸ்ரோர்ஸ் | 81 000 |
| 2021.07.22 | 101 | தறங்க அன் சண்ஸ் | 53 000 |
| 2021.07.30 | 102 | உதய ரேடிங் | 15 000 |

வேண்டப்படுபவை,
மேற்குறித்த கொடுக்கல் வாங்கல்களின் அடிப்படையில் 2021 ஆம் ஆண்டு யூலை மாதத்துக்கான விற்பனை நாளேட்டைத் தயாரித்து பேரேட்டுக் கணக்குகளுக்கு மாற்றுக.

8. வணிகத்தின் விற்பனை நாளேட்டின் கூட்டுத் தொகையானது பேரேட்டுக் கணக்குகளுக்கு மாற்றும் போதான நாட்குறிப்பாக அமைவது?
   (1) கடன்பட்டோர் கணக்கு வரவு விற்பனைக் கணக்க செலவு
   (2) விற்பனைக் கணக்கு வரவு கடன் பட்டோர் கணக்கு செலவு
   (3) காசுக் கணக்கு வரவு கடன் பட்டோர் கணக்கு செலவு
   (4) காசுக் கணக்கு வரவு விற்பனைக் கணக்கு செலவு

9. கணேவத்த வியாபாரியினால் பின்வரும் தகவல்கள் உங்களுக்குத் தரப்பட்டுள்ளன.
   I. 2021.07.01 உயன்வத்த ஸ்ரோஸிடமிருந்து இலக்கம் 288 இல் கடனுக்குக் கொள்வனவு ரூபா . 200 வீதம் 50 கணித உபகரணப் பெட்டிகள் (குறைக்கப்பட வேண்டிய விற்பனைக் கழிவு 10%)
   II. 2021.07.06 அளுத்கம வியாபாரத்துக்கு கடனுக்கு விற்பனை இலக்கம் 50 இல் ரூபா.500 வீதம் போட்டோ பிரதிக் கடதாசி பொதிகள் 40 (குறைக்கப்பட வேண்டிய கழிவு 5%)
   III. 2021.07.13 ககுளாவெல ஸ்ரோஸிற்கு கடனுக்கு விற்பனை இலக்கம் 51 இல் பெட்டி ஒன்று ரூபா .300 வீதம் குண்டு முனைப் பேனைப் பெட்டிகள் 30 (குறைக்கப்பட வேண்டிய கழிவு 15%)
   IV. 2021.07.20 கபுகேன வியாபாரத்திடம் கடனுக்குக் கொள்வனவு இலக்கம் 301 இல் ஒன்று ரூபா . 800 வீதம் சுவர் மணிக்கூடுகள் 20 (குறைக்கப்பட வேண்டிய கழிவு 20%)
   V. 2021.07.25 இலக்கம் 100 இல் கோணாகம வியாபாரத்திடம் கடனுக்குக் கொள்வனவு கட்டு ஒன்று ரூபா . 300 வீதம் கோப்பு உறைக் கட்டுகள் 60 (குறைக்கப்பட வேண்டிய கழிவு 25%)
   VI. 2021.07.30 அன்றைய தின இலக்கம 52 இல் தல்விர ஸ்ரோஸிற்கு கடனுக்கு விற்பனை ஒன்று ரூபா . 250 வீதம் தண்ணீர்ப் போத்தல் 20 (குறைக்கப்பட வேண்டிய கழிவு 5%)

Commerce and Business Studies Branch

வேண்டப்படுபவை,

(1) கொள்வனவு மற்றும் விற்பனை நாளேடு.

(2) உரிய நடவடிக்கைகளை பேரேட்டுக் கணக்குகளுக்கு மாற்றுக.

10. வியாபாரத்தின் பொது நாளேட்டில் பதிவு செய்யப்படும் கொடுக்கல் வாங்கல்கள் கீழ் வரும் எவ் வகையினுள் உள்ளடங்கும்?

(1) வியாபாரத்தின் பயன்பாட்டுக்காக காசுக்குக் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள்

(2) ஏனைய முதற் பதிவேடுகளில் பதிவு செய்யப்படாத ஏனைய கொடுக்கல் வாங்கல்.

(3) மீள் விற்பனை செய்யும் நோக்கில் காசுக்குக் கொள்வனவு செய்யப்பட்ட் பொருட்கள்.

(4) வியாபாரத்தின் உரிமையாளருடன் தொடர்பான கொடுக்கல் வாங்கல்கள்

11. வணிகத்திக் பொது நாளேடானது கீழே காட்டப்பட்டுள்ளது. கீழே காட்டப்பட்டுள்ள இல 1-6 விபரிக்குக.

பொது நாளேடு

| திகதி | வவுச்சர் இலக்கம் | விபரம் | பே.ப | வரவு ரூபா. | செலவு ரூபா. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |

12. பொது நாளேடுகளில் பதியப்படும் முன்று வகையான பதிவுகளின் வகைகளினைக் உதாரணங்களைக் குறிப்பிடுக.

13. கீழ்வரும் நடவடிக்கைகளை பொது நாளேட்டில் பதிவு செய்யவும்.

(1) 2021.07.01 ஆம் திகதி வவுச்சர் இலக்கம் 200 இல் வணிக நோக்கத்துக்காக உதானி நிறுவனத்திடமிருந்து கடனுக்குக்கொள்வனவு செய்யப்பட்ட தளபாடங்கள் ரூபா. 50 000

(2) 2021.07.10 ஆம் திகதி வவுச்சர் இலக்கம் 500 இல் வணிக நோக்கத்துக்காக ஜானக நிறுவனத்திடமிருந்து கடனுக்குக்கொள்வனவு செய்யப்பட்ட பண்டங்கள் ரூபா. 20 000

14. குசலினுடைய வணிகத்தில் நடைபெற்ற சில நடவடிக்கைகள் கீழே தரப்பட்டுள்ளன. இந்த நடவடிக்கைகளுக்கான மூல ஆவணங்களைப் பெயரிடுக.

| கொடுக்கல் வாங்கல் | மூல ஆவணம் |
|---|---|
| 1. உயன்கல்ல ஸ்ரோருக்கு கடனுக்கு விற்பனை ரூபா . 50 000 | ........................................ |
| 2. அம்பகஸ்வாவி வணிகத்திடம் கடனுக்குக் கொள்வனவு ரூபா . 40 000 | ........................................ |
| 3. காசு விற்பனை மூலம் பெற்ற காசு ரூபா 30 000 | ........................................ |
| 4. வணிக நோக்கத்துக்காக கடனுக்குக் கொள்வனவு செய்யப்பட்ட தளபாடங்கள் ரூபா . 80 000 | ........................................ |

15. மேற்குறித்த கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்வதற்கான மூலப் ஏடுகளை பெயரிடுக.

(1) .............................

(2) .............................

(3) .............................



Commerce and Business Studies Branch

(4) .............................

16. கபுகேன வணிகத்தின் கீழ் வரும் தகவல்கள் உங்களுக்குத்தரப்பட்டுள்ளன.

கொள்வனவு நாளேடு

| திகதி | பட்டியல் இலக்கம் | வழங்குனர் | பெறுமதி ரூபா. | முழுப் பெறுமதி |
|---|---|---|---|---|
| 7/2 | 0718 | அனுர | 50 000 | |
| 7/10 | 0610 | ரன்ஜித் | 35 000 | |
| 7/30 | 0783 | சமிந்த | 1)...................... | 100 000 |
| | | | | 100 000 |

விற்பனை நாளேடு

| திகதி | பட்டியல் இலக்கம் | வாடிக்கையாளர் | பெறுமதி ரூபா | முழுப் பெறுமதி |
|---|---|---|---|---|
| 7/5 | 0712 | சமன் | 2)...................... | |
| 7/15 | 0713 | சாமர | 26 000 | |
| 7/25 | 0714 | சுபுண் | 19 000 | 70 000 |
| | | | | 70 000 |

வேண்டப்படுபவை,

(1) உரிய இடைவெளிகளை நிரப்பவும்.

(2) உரிய பேரேட்டுக் கணக்குகளை காட்டவும்.

17. விற்பனை நாளேடானது,

1. பேரேட்டுக் கணக்காகும்
2. மூலப் பதிவுப் புத்தகமாகும்
3. நிதி நிலைக் கூற்றாகும்
4. தனிப்பட்ட கணக்காகும்

18. நெலும் பொகுணு வணிகமானது 20 இறாத்தல் பாண்களை மீள் விற்பனைக்காக ஒரு வணிகத்திடமிருந்து கடனுக்குப் பெற்றுள்ளது. இது காட்டப்பட வேண்டியது,

1. காசுக் கணக்கு
2. விற்பனை நாளேடு
3. கொள்வனவு நாளேடு
4. பொது நாளேடு

19. மகுல் வாவி வணிகத்தின் பின்வரும் தகவல்கள் உங்களுக்குத் தரப்பட்டுள்ளன.

| திகதி | பட்டியல் இலக்கம் | வாடிக்கையாளர் | அளவு | ஏனையவை |
|---|---|---|---|---|
| 2021.03.10 | 99 | அமாலி | ஒன்று ரூபா 1500 வீதம் 200 ரீ சேட்கள். | விற்பனைக் கழிவு 10% |
| 2021.03.20 | 100 | சுவிமாலி | ஒன்று ரூபா. 800 வீதம் 50 அரைக் காற்சட்டைகள் | விற்பனைக் கழிவு 20% |
| 2021.03.30 | 101 | நிமாலி | ஒன்று ரூபா. 1000 வீதம் 20 கவுண்கள் | விற்பனைக் கழிவு 5% |

வேண்டப்படுபவை,

1. விற்பனை நாளேடு
2. உரிய பேரேட்டுக் கணக்குகள்

20. இடைவெளிக்கு பொருத்தமான கணக்கீட்டு பதங்களை பயன்படுத்தி நிரப்புக



Commerce and Business Studies Branch

01.03.2021 அன்று வியாபாரத்தை தொடங்கிய நாதன் அகமது நிறுவனத்திடம் ரூ. 100,000 பெறுமதியான தளபாடங்களை கடனுக்கு கொள்வனவ செய்தார். இது 1…………………… பதியப்படல் வேண்டும் இதற்கான மூல ஆவணம் 2 ……………………… ஆகும். மீள் விற்பனை நோக்குடன் ரூ 50000 பெறுமதியான பொருட்கள் மாலன் வியாபாரத்திடம் கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்டது அது 3…………………. பதியப்படும் அதே வேளை அதற்கான மூல ஆவணம் 4 ………………… ஆகும். நாதனினால் ரூ 80000 பெறுமதியான பொருட்கள் நடராஜ் நிறுவனத்திற்கு கடனுக்கு விற்கப்பட்டது,அது 5 ……………………… பதியப்படுவதுடன் அதற்கான மூல ஆதார ஆவணமாக 6 ………………………… பயன்படுத்தப்பட்டது.

Commerce and Business Studies Branch